**ARTICLE 13 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00042**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 67–76
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# ஆழிசூழ் உலகு நாவல் காட்டும் பரதவர் வாழ்வியல்

**சந்திரா கோ[1,*], முனைவர்.ராமபாண்டி க[2], முனைவர்.மகேஸ்வரி மு[3]**

[1]India
[2]உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக்கல்லூரி,திசையன்விளை ., India
[3]இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** சந்திரா கோ — chandra16477@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

நவீன இலக்கியங்களில் ஒன்றான நாவலானது மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாகும். படைப்பாளரின் சமூக நோக்கங்களுக்கு ஏற்ப படைப்பிலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. சாகித்ய அகாதெமி விருது பெற்ற நாவலாசிரியரான ஜோடி குரூஸ் அவர்கள் தங்கள் படைப்புகளில் தான் பிறந்து வளர்ந்த மண்ணின் நாமம் பரப்பும் பரதவ இன மக்களின் வாழ்வியலை அனுபவத்தின் வாயிலாக படைத்திருப்பதைக் காண முடிகிறது. அவ்வகையில் அவருடைய ஆழி சூழ் உலகு நாவலில் பரதவ மக்களின் வாழ்வியல் கூறுகளான தொழில், விருந்தோம்பல் பண்பு, மேற்கொள்ளும் பிரச்சனைகள் மனிதாபிமான செயல்கள் அனைத்தையும் கண்டறிவதாக இவ்வாய்வு அமைகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** நவீன இலக்கியம்; மக்கள் வாழ்வியல்; சமூக நோக்கம்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** கோ, ச., க, மு., & மு, மு. (2026). ஆழிசூழ் உலகு நாவல் காட்டும் பரதவர் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

மக்களின் வாழ்க்கையினைக் கதை மூலமாகக் கலை வடிவில் வெளிப்படுத்தும் கதை மட்டுமல்ல அது ஒரு சமூகத்தின் வெளிப்பாடு நாவல் எனலாம். நாவல் மூலமாக ஒரு சமூகத்தை வெளிப்படுத்துவதில் நாவலாசிரியரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் தான் உணர்ந்த வாழ்க்கையை மொழி வடிவில் வெளிப்படுத்த அசாத்தியமான திறமை வேண்டும். இத்திறமை ஜோடி குருஸுக்கு அமைந்திருக்கிறது. இவருடைய மூன்று நாவல்களும் பரதவ சமூக மக்களின் வாழ்க்கையை கட்டமைக்கின்றன. பரதவ மக்கள் பற்றிய பதிவுகள் மிகக் குறைந்த அளவே ஆகும். நெய்தல் நிலம் பற்றிய படைப்புகளில் கரையிலிருந்து கடலை நோக்கிய ஒரு பார்வை காணப்பட்டது. ஆனால் ஜோடி குருஸின் நாவல்கள் முதல்முறையாக பரதவ மக்களின் வாழ்க்கையைக் கடலில் இருந்து கரையை குறித்த பார்வையாக வித்தியாசமான போக்கை கொண்டிருக்கின்றன இவ்வாறு ஜோடி குருஸின் நாவல்கள் சூரிசூர் உலக நாவல் காட்டும் பரதவ சமூக மக்களின் வாழ்வியலைக் கண்டறிவதே இக்கட்டுரை ஆகும்.

ஜோடி குரூஸ்

ஜோடி குரூஸ் நெல்லை மாவட்டம் உவரியில் பிறந்தவர். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் ரெஜிஸ் ஜோ ஆனந்த் என்பதாகும். இவர் தனது

பள்ளி படிப்பை இடையான்குடியிலும், கல்லூரி படிப்பை எம்ஃபில் பொருளாதாரம் சென்னை லயோலா கல்லூரியிலும், படிப்பை திருச்சி புனித வளவனார் கல்லூரியிலும் பயின்றுள்ளார் 30 ஆண்டுகளுக்கு மேலாக சரக்கு கப்பல் நிறுவனங்களில் பணியாற்றி உள்ளார் சென்னை ராயபுரத்தில் வணிக கப்பல்களுக்கான ஆலோசனை நிறுவனம் நடத்தி வருகிறார்.

படைப்புகள்
புலம்பல்கள் (கவிதை) - 2004
விடியாத பொழுதுகள் (ஆவணப்படம்)- 2004
ஆழி சூழ் உலகு (நாவல்) – 2004
கொற்கை (நாவல்) – 2009
டு வாட்ஸ் டவுன் (ஆவணப்படம்) – 2009
எனது ஜனமே (ஆவணப்படம்) - 2010
அஸ்தினாபுரம் (நாவல்) – 2016
வேர்பிடித்த விலைநிலங்கள் (தன் வரலாறு) – 2017
இணையம் துறைமுகம் (ஆவணப்படம்) – 2018
கவனம் ஈர்க்கும் கடலோரம் கட்டுரைகள் – 2019
யாத்திரை (நாவல்) 2021

## விருதுகள்

கொற்கை நாவல் 2013ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது. ஆழிசூழ் உலகு நாவல் 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை பரிசினை பெற்றுள்ளது.

கனடா இலக்கியத் தோட்ட விருது -2006
சுஜாதா உயிர்மை விருது - 2011
லூர்தம்மாள் சைமன் விருது - 2013
லயோலா இலக்கிய விருது - 2014
இலக்கிய வீதி அன்னம் விருது - 2014
உஸ்தாத் பிஸ்மில்லாகான் விருது -2015
திருவள்ளுவர் இலக்கிய விருது – 2015
பற்றி விளக்குகின்றன
ஆழி சூழ் உலகு

கடலிலும் கடற்கரையிலும் பரதவர் படும் பாட்டை எடுத்துக் கூறும் புதினம் ஆழி சூழ் உலகு ஆகும். பரதவர்களின் வாழ்க்கை போராட்டத்தை ஜனனவழி ஒன்றுதான் மரண வழிகள் எத்தனை? என்று அவர்களின் வழிகளை எடுத்துக் கூறும் புதினம் ஆகும். திருச்செந்தூரிலிருந்து கன்னியாகுமரி செல்லும் வழியில் சரிபாதி தூரத்தில் அமைந்துள்ள ஊர் ஆமந்துறை. இதைச் சுற்றியுள்ள ஊர்களில் 1933 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரை நடந்த நிகழ்வுகளை விளக்குவதாக இப்புதினம் அமைந்துள்ளது. முத்துக்குளித்தல், சங்கெடுத்தல் மீன்பிடித் தொழில்கள் கட்டுமரங்கள் வள்ளங்கள் கொண்டு நடைபெற்ற நிகழ்வுகள் போன்றவற்றை இனிமையான வட்டார வழக்குகளில் உணர்வுபூர்வமாய் உயிரோட்டமாய் பதிவு செய்யப்பட்டுள்ளன. பரத மக்களின் மூன்று தலைமுறை வாழ்க்கை பற்றிய பதிவாகவும் கடலில் ஏற்படும் பருவநிலை மாறுதல் அவர்கள் அடையும் துயரங்களை விளக்குவதாக இவை அமைகின்றது.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## பண்பாடு

பண்பாடு என்பது மனித அனுபவத்தின் ஊடாக ஓர் உலகளாவிய பண்பாக உள்ளது. எனினும் அந்தந்த வட்டாரத்தின் தன்மைகளை உள்வாங்கிக் கொண்டு தனித்துவமானதாக காணப்படுகிறது.

பண்பாடு என்பது நிலைபெற்று நிற்கக் கூடியது. அதே நேரத்தில் இயக்கம் சார்ந்ததாகவும் உள்ளது. இந்த இயக்கத்தில் ஊடாக ஒரு தொடர்ச்சியான மாற்றத்திற்கு அது ஆட்படுகிறது.

நம் வாழ்க்கை முறைக்கு ஒரு முழு உருவத்தை அளிக்ககூடியதாகப் பண்பாடு திகழ்கிறது. இன்னொரு வகையில் நம் வாழ்க்கை முறையை நிர்ணயிக்கிற ஒன்றாகவும் பண்பாடு திகழ்கிறது" (பண்பாட்டு மானிடவியல், ப.21)

பண்பாடானது மக்களிடையே பல்வேறு நிலைகளில் காணப்பட்ட போதிலும் அதிகாரம் மற்றும் அடிமைத்தன வெளிப்பாடாகவும் எழுதி வருவதை நாம் காணலாம். மக்களுடைய இணக்கமான ஒன்றாக இவை காணப்பட்டாலும் பல்வேறு அடையாளங்கள் வாயிலாக அவை ஆடை, அணிகலன்கள் பயன்படுத்துகின்ற பொருட்கள், பேச்சுக்கள், வழிபாடுகள் உணவு முறைகள் போன்றவற்றின் வாயிலாக ஒவ்வொரு மக்களுடைய பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் நாம் எளிதில் இனம் கண்டுகொள்ள முடிகிறது எனலாம்.

## பரதவர்களின் உடலமைப்பு

பரதவ இன ஆடவர்கள் கட்டான முருக்கேறிய தசையினையும் பறந்து அகன்ற மார்பின் குன்றென திரண்ட தோள்களையும், உடையவர்கள் அஞ்சாத நெஞ்சமும் ஆற்றலும் வீரமிக்கவர்கள் துடுக்கும் மிடுக்கும் துணிவும் கொண்டவர்களாக ஓங்கி உயர்ந்து உருமிஎழும் அலைகளின் ஊடுருவி பாய்ந்து பயின்று அச்சத்தை அகற்றி உழைப்பவர்கள் இவர்கள் வலிமை வாய்ந்தவர்களாகவும் தோற்றத்தில் உறுதியும் வலிமையும் உடையவர்களாக காணப்பட்டாலும் பழகுவதற்கு கபடமில்லாத குழந்தை உள்ளம் கொண்டவர்களாக இருப்பார்கள். உடலிலும் உள்ளத்திலும் வீரமிக்கவர்களாகவும் கடல் வேட்டையில் தேர்ச்சி பெற்றவர்களாகாவும் கொடும் சுறாக்களையும் கொல்லுவதில் கைதேர்ந்த தன்மை உடையவர்கள் இந்நாவலின் முக்கியமான பாத்திரமாக விளங்குபவர் தொம்மாந்திரை "உயர்ந்து வளர்ந்த தேக்கு மரத் தேகம் நீண்டு கால் மட்டும் வரை தொங்கும் கைகள் பின்னோக்கி சீவப்பட்ட தேசம் வலது நெற்றியில் அரிவாள் வெட்டுதழும்பும், சுருக்கங்களும், வலது புஜத்தில் ஒரு பெரிய சுறா மீனும், இடதுபுஜத்தில் பெரிய சம்மனசானவர் படமும் கருந்தேகத்தில் பளிச்சிட்டன" (ஆ.சூ.உ.ப.23) என்று கூறுவதில் இருந்து பரதவ இன மக்களின் உடலமைப்பு வலிமை மிக்கதாகவும் அச்சமின்றி எதையும் துணிவோடு எதிர்க்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

## கலைகள்

பரதவ இன ஆடவர்கள் மீன்பிடித் தொழிலில் மட்டுமல்லாது பிற கலைகளிலும் தங்களை ஈடுபடுத்தி தங்களது ஆற்றலை வளர்த்து வந்துள்ளனர். பரதவர்கள் "எந்த பிரச்சனைக்கும் முடிவு மோதி பார்ப்பதுதான் என்று கருதக் கூடியவர்கள் கடல் தொழில் தவிர மற்ற நேரங்களில் களியல் கூத்து என்று இருந்தாலும் சிலம்பாட்டம் வாள் வீச்சு,

களரி என்று தற்காப்பு கலையிலேயே வாலிபர்கள் அதிக ஆர்வம் உள்ளவர்கள். (ஆ.சூ.உ.ப.61) என்று கூறுவதில் இருந்தும் ஆனாலும் சிலமும் நாட்டு சண்டை வாள்வீச்சு வரும் என்று பல கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தான். ஒத்த வீச்சு, படவீச்சு போன்ற சிலம்பு விளையாட்டுகளில் ஜஸ்டினை ஜெயிக்க அந்த பிராந்தியத்திலேயே ஆள்கள் யாரும் இல்லை. (ஆ.சூ.உ.ப.41) என்பதிலிருந்தும் பரதவ ஆடவர்கள் பிற கலைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதை நாவலாசிரியர் வெளிப்படுத்தி இருப்பதை காண முடிகிறது

## தொழில்கள்

பரதவ மக்கள் முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல், உப்பு உற்பத்தி செய்தல் போன்றவற்றோடு தங்களது பிரதான தொழிலாக மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.மீன்களின் இடப்பெயர்வுகளையும் அசைவுகளையும் நுட்பமாகக் கண்டறிந்து அத்தொழிலை கையாண்டுள்ளனர். மீன்பிடித் தொழிலில் சுறாப்பாறு பயணம் என்பது மிகக் கடினமான தொழிலாக கருதப்பட்டுள்ளது. இது ஒரு ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாகும்.

“சுறாப்பாறு பயணம் என்பது உயிரை பணயம் வைக்கும் மிகக்கடினமான தொழில் வீரமும் விவேகமும் நிறைந்தவர்களால்தான் இந்தத்தொழிலுக்குச் சென்று திரும்ப முடியும். போராட்டங்களுக்கு மத்தியில் நல்ல லாபகரமான தொழிலாய்க் கருதப்பட்டாலும் கூட சுறாப்பாறு தொழில் என்பது பரதவர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனந்தான் ஆடிமாதம் கடலடியிலும் பூண்டுத் தொழில் செய்பவர்கள் கூட இந்த சுறாப்பாறு என்ற பெயரை கேட்டதுமே அஞ்சி நடு நடுங்குகிறார்கள். காற்றையும் கடலையும் எதிர்த்து போரிடுவது இவர்களின் அன்றாட வாழ்வாக இருந்தாலும்

இந்த சுறாமீன் வேட்டையில் கரணம் தப்பினால் மரணம் நிச்சயம். சுறாப்பாறுக்கு இவர்கள் குறி வைத்துப் போவது சுறாமீன் வேட்டைக்காகத்தான் வேளா, இழுப்பா கொளம்பன் சுறா, வரிபுலியன் உழுவை போன்ற சுறா மீன்களுக்காகத்தான். ( ஆ.சூ.உ.ப.24) என்று கூறுவதிலிருந்து சுறா மீன்களைப் பிடிப்பது எவ்வளவு கடினம் என்பதையும்

“விவரம் இல்லாமல் சுறாப்பாறு தொழிலுக்குப் போகிறேன் என்று போனவர்கள் திரும்பி வராமல் மரித்துப் போவதும் உண்டு. கருத்துப் பெருத்த விழிகளை உருட்டியவாறு வரும் வரிப்புலியன் போன்ற மீன்களைப் பார்த்தவுடன் பயந்து இறங்கி கடலில் விழுந்து அதன் ஜோடி மீன்களால் கடித்து குதறப்பட்டவர்களும் உண்டு. மிக ஆழ்கடல் பகுதியாக இருப்பதால் பெரிய மீன்களின் தொந்தரவு அதிகம்”(ஆ.சூ.உ.ப.25) என்பதிலிருந்தும் மீன்பிடித் தொழில் எவ்வளவு அபாயகரமான தொழில் என்பதனையும், அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் நாவலாசிரியர் பிரதிபலித்துக் காட்டியுள்ளதை நன்கு அறிய முடிகிறது எனலாம்.

## மீன்களின் குணநலன்களை அறிதல்

பரதவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் போது மீன்களின் தன்மைகளையும் குணநலன்களையும் நன்கு அறிந்து வைத்துள்ளனர். அஃறினை உயிர்களுக்கும்,உயர்திணை உயிர்களுக்கும் இடையேயான ஒரு உறவினை, அன்பை நாம் காணலாம்.

“போஸ்கோ பயப்புடாத ஒன்கல்வ ரெம்ப நல்லதுவ காந்திமாதிரி சாதுவானதுவ தோணியள்ல போற நம்ம ஆள்க தவறி கீழே விழுந்திற்றான்வயின்னா இந்த ஓங்கல்வதாம் சுத்தி நின்னு சுறாப்பயல்வ கிட்ட வராம காப்பாத்துமாம்” (ஆ.சூ.உ.ப.27) என்பதிலிருந்து ஓங்கல் மீனின் தன்மைகளையும் அவற்றின் பண்புகளையும் நாம் உணர்ந்து கொள்ளலாம். ஒரு உயிரினங்களுக்கு இடையான பாசப்பிணைப்புகளையும்

“அந்தக்கறுப்பு இன்னும் கீழதெரியுது பாருங்க… என்றான் ஆமா ஈவு இரக்கம் இல்லாம ஜோடியா இருந்தவள பிரிச்சி கொண்டு போறோம். அதுவளுக்கும் ஆத்துமா இருக்குமில்ல பாரு கோத்ரா எவ்வளவு பாசம் இருந்தா அந்த ஜோடி மீனு பின்னாலயே வரும்! ஒரு ராத்திரி முழுசும் கடந்தாச்சி இன்னும் வந்துக்கிட்டு இருக்கி நம்ம என்ன நெனக்கிறோமுன்னா மனுசனுக்குத்தான் பந்த பாசம் எல்லாம் இருக்குமுன்னு அப்படியின்னா கீழ வாற கறுப்புக்கு பாசம் இல்லாமலா தொடர்ந்து வருது?” (ஆ.சூ.உ.ப.47) என்று கூறுவதிலிரும் மீன்களிடையே காணப்பட்ட உறவு நிலைகளையும் நாவலாசிரியர் பாத்திரக் கூற்றுகளின் வழியாக புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

## விருந்தோம்பல்

பண்பாட்டைப் போற்றி வாழக்கூடியவர்கள் நம் தமிழர்கள். அவர்களது தலையாயப் பண்பாக அன்று முதல் இன்று வரை காணப்படுவது விருந்தோம்பலாகும். கணவன் மனைவி இருவரும் இணைந்து இல்லறத்தில் ஆற்ற வேண்டிய பண்பாக அறமாக இருப்பது விருந்தோம்பலாகும்.இன்றளவும் மக்களிடையே அவர்களது உணர்வுகளில் ஊறிப்போன ஒன்றாகக் காணப்பட்டு வருவதை காண முடிகிறது. ஆமந்துறையிலிருந்து கொழும்பிற்கு பிழைப்பதற்காகச் சென்று கொழும்பில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் தான் பிறந்த நாட்டிற்கே அகதிகளாக வரும் மிக்கேல் பர்னாந்துவின் குடும்பம் இந்நாவலில் காட்டப்படுகிறது மிக்கேல் பர்னாந்து இறந்துவிட அவரது வாய் பேசமுடியாத மகனும் மருமகளும் ஆமந்துறைக்கு வருகிற இவர்களை தொம்மாந்திரையும், கோத்ராவும் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று உபசரித்ததோடு மட்டுமல்லாமல் அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு உதவக்கூடிய தன்மையினையும் காண முடிகிறது.

“ தொம்மாந்திரையாரின் வீட்டிற்கு அவர்களைக் கூட்டிக்கொண்டு முன்னே நடந்தார் போஸ்கோ சற்று பின்னே வந்த கோத்ரா மெதுவாக தொம்மாந்திரையரிடம் கேட்டார், இப்ப தங்க வச்சிருவம் கையில வச்சிருக்க காச வச்சி கொஞ்சநாள் போவும் பெறவு வருமானத்துக்கு என்னவழி?…” கூடமாட தொழிலுக்கு கூட்டிட்டுப் போயி பழக்கிற வேண்டியதாம் எல்லாருக்கும் படி அளக்குற அந்த கடலாத்தா அவனுக்கும் பசி ஆத்தாமாட்டாளா ! (ஆ.சூ.உ.ப.189) என்று பாத்திரக்கூற்றுகளின் வழியாக நாவலாசிரியர் பரதவர்களின் விருந்தோம்பல் பண்புகளை சுட்டிக்காட்டியிருப்பதை காண முடிகிறது.

## தலைவர்கள்

பரதவ இன மக்களின் தலைவர்கள் பல நிலைகளில் காணப்பட்டுள்ளனர். பரதவ இன சமூகத்தின் மூத்தவர்கள், பெரும்பணக்காரர்கள் அரசியல் தலைவர்கள், மெனக்கடம்மார்,

மேசைக்காரர் என அழைக்கப்பட்டிருக்கின்றனர். பரதவ இன மக்களின் குறைகளையும் பிரச்சனைகளையும், தீர்க்ககூடியவர்களாக இவர்கள் காணப்படாமல் அவர்களது சுயநலத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து வாழ்ந்துள்ளார்கள். சமூகநலம் என்ற போர்வையில் கூடும் பணம் படைத்தவர்கள் இந்த கூட்டங்களை கூத்தடிப்பதற்காகவே பயன்படுத்துகிறார்கள். முன்னேறியவர்களும் சமுதாயத்தின் உயர்த்தரப்பினராய் மதிக்கப்பட்டவர்களும் தங்கள் பதவிகளை காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தார்களே அல்லாமல் யாரும் எதற்காகவும் எந்த காலத்திலும் சமூக முன்னேற்றத்திற்கு வழி காட்டவில்லை.” (ஆ.சூ.உ.ப.146)

“கோத்ரா, வீண் பெருமையிலே அழிஞ்சி போரானுவ இப்ப கூட இந்த மேடையில் இருக்கான்வளே இதுல எவனுக்காவது இந்தப்பாவப்பட்ட ஜனங்கள் நமக்காகத்தான இப்படி காத்துக் கெடக்குதுவ இதுவளுக்கு ஏதாவது பண்ணனுமேன்னு அக்கறை இருக்கா பாரு” (ஆ.சூ.உ.ப.147) என்று கூறுவதில் இருந்து காலம் காலமாகவே மக்களை ஏமாற்றி, மக்களுக்காக வாழாமல் சுய நலத்துடன் வாழும் தலைவர்கள் இருந்துள்ளனர், இருக்கின்றனர் என்பதை நாவல் ஆசிரியர் நமக்கு வெளிப்படுத்தி காட்டியுள்ளதை அறிய முடிகிறது.

## பிரச்சனைகள்

பரதவ மக்கள் தங்கள் பிரச்சனைகளை தீர்க்கக்கூடியவர்களாக தலைவர்களை நம்பியுள்ளனர். அவர்கள் வாழ்வில் கல்வி, தொழில், பொருளாதாரம் என்ற நிலைகளில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து வந்துள்ளனர். “ஆயன் இல்லாத ஆடுகள் போலிருந்த இவர்களின் நிலை வரப்போகும் இந்தத்தலைவர்கள் நினைத்தால் தங்கள் வாழ்வில் நல்ல மாற்றம் வரும். தங்கள் குழந்தைகளின் படிப்பில் முன்னேற்றம் போன்றவற்றிற்கு ஒரு வழி திறக்கும் என்று மனதார நம்பினார்கள். தூத்துக்குடிக்கு வரும் கப்பல்கள் தங்கள் வலைகளைக் கிழிப்பது… ஆழியில் நடக்கும் சாவு பற்றியும், கடல் சீற்றமான காலங்களில் ஊருக்குள் கடல் தண்ணீர் புகுந்து குடிசைகளை அரித்துக் கொண்டோடுவது இந்தப் பிரச்சனைகளில் குறைந்த பட்சம் ஒன்றிரண்டிற்காவது தீர்வு பிறக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.” (ஆ.சூ.உ.ப.144) “கடற்துறைகளில் வாழும் இந்த பரதவர்களுக்கும் சுற்றி நாட்டுப்புறங்களில் வாழும் நாடார் சமூகத்திற்கும் ஒத்துப்போவது இல்லை. சிறிய பிரச்சினைகளில் ஆரம்பிக்கும் இந்த மோதல்கள் கொலை கொள்ளை வரை தான் போய் முடிந்திருக்கிறது.” (ஆ.சூ.உ.ப.145)

“ஆனி ஆடி புரட்டாசி மாதங்களில் கடலடி அதிகமாக இருப்பதால் ஆமந்துறையில் தொழில் செய்ய முடிவதில்லை இந்தக்காலங்களில் வயிற்றுப்பாட்டுக்காக மக்கள் கடலடி குறைந்த துறைகளை நாடிச்செல்வது வழக்கம்” (ஆ.சூ.உ.ப.67)என்று கூருவதிலிருந்து இருந்து பரதவ மக்கள் பல்வேறு பிரச்சினைகளுடன் தங்கள் வாழ்வைக் கொண்டு சென்றுள்ளனர் என்பதைக் காண முடிகிறது.

## ஒற்றுமையின்மையும் போராட்டங்களும்

காலங்காலமாகவே மக்களிடையே ஒற்றுமையின்மையும் போராட்டங்களும் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. பிற இன மக்களுடனான போராட்டம் இன்றி தங்கள் கொள்ளும் உயர்வு தாழ்வு

கருதியும் பொருளாதார இயலாமையை பிரச்சினைகளுடன் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன அடுத்த சமூகத்தோடு சண்டை என்று வரும்போது தாங்கள் சொந்த பந்தங்களை மறந்து ஒன்றுபட்டு இந்த பரதவர்கள் மற்ற சமயங்களில் தாங்கள் கொள்ளும் வந்த காலம் தொட்டு ஒற்றுமை இல்லாமல் தான் வாழ்ந்து இருக்கிறார்கள் இவர்களுக்குள் ஏற்பட்ட பெரும் கலகங்களின் நதி மூலத்திற்கு போனால் அவை எல்லாம் பெண்களாகவும் பதவிகளை காப்பாற்றி கொள்வதற்காகவும் தான் நடந்திருக்கிறது. நேருக்கு நேர் கம் எடுத்து கழகம் பண்ணி வெட்டிக் கொள்வது நடந்தாலும் குடும்பங்களை வேரோடு சாய்ப்பதற்கு ரத்த உறவுகளாலே துதி விதைகளை வைத்து பிழைப்பு நடத்தும் தொல்லைகளை நாடி சென்று இருக்கிறார்கள் தங்களுக்கு பிடிக்காதவர்களை பழிவாங்க கடலில் பெரிய மீன்களை ஏவிவிடும் வழக்கமும் இருக்கிறது என்பதை கொண்டு நாவலாசிரியர் பிரதம இன மக்களின் ஒற்றுமையின்மையை சுட்டிக்காட்டி உள்ளார்.

“அமந்துறையில் வறுமை தாண்டவம் ஆடியது ஒரு சிற்றுண்டி கூட கடலில் இறங்க முடியவில்லை, ஜனங்கள் எத்தனையோ முறை யார் வீட்டின் முன் வந்து அழுது மண்டியிட்டு பார்த்து விட்டார்கள் இருட்டியார் மனம் இளகவேயில்லை.

கடல் வறண்டும் போனதற்கு முழு இதற்கு காரணம் இருட்டியர்கள் தான் என்பது அவர்களுக்கு தெரிந்தது… கையில் வைத்திருந்த சிலையை வைத்து யாரையும் “போ… கடலுக்கு போ” என்று இருட்டு அறையில் ஆகவும் ஊர் முழுவதும் வேளமாய் கிடந்தது (ஆ.சூ.உ.ப. 102). என்று கூறுவதில் இருந்து மந்திரம் மாயவித்தைகள் கடற் கொள்ளையர்கள் மக்களை துன்பத்திற்கு உள்ளாக்கி இருப்பதையும் இருட்டியார் என்ற பாரதத்தின் வழியாக நாவலாசிரியர் பிரதிபலித்து காட்டியுள்ளார்.

திருமணம் முறை

திருமண முறைகள் பரதவ மக்களிடையே பல்வேறு தன்மைகளில் நடைபெற்று வந்திருக்கின்றன. நவீன காலம் மாற்றங்களுக்கு ஏற்ப கலப்புத் திருமணம், காதல் திருமணம், விதவை மறுமணம் என்ற போன்றவை நடைபெற்று இருக்கின்றன. உறவு முறையற்ற திருமணமும் நிகழ்ந்துள்ளன. அண்ணன் தங்கையை திருமணம் செய்து கொள்ளும் முறை இருந்துள்ளன. “என்ன… மொறயில்லாமப் பேசுற அவ எனக்கு தங்கச்சி முறையில்லையா?” ஆனால் எங்க சித்திக்கு புறக்கலையே சாமி.. இது சரிவர மாதிரி எனக்கு தெரியல சாமி.. நான் அவளை விரும்புறஞ் சாமி… அவளும் என்ன விரும்புகிறா என்று கில்பர்ட் எஸ்கலின் என்ற பாத்திரங்களின் வழி அண்ணன் தங்கையை திருமணம் செய்யும் முறையற்ற திருமணத்தை நாவலாசிரியர் சுட்டிக்காட்டுவதிலிருந்து திருமண பந்தம் இன்றைய இளைஞர்கள் திசை மாறி போவதை அறிய முடிகிறது.

மனிதாபிமான செயல்

மனிதர்களிடையே மனிதாபிமானம் காலத்தால் ஏற்ப மாற்றம் அடைவதோடு அச்செயல் குறைந்து வருவதையும் நாம் காண முடிகிறது. மனிதனை மனிதன் நேசிப்பது குறைந்துக் கொண்டே வருகிறது. “ தன் குடும்பத்தை நம்பி தான் வீட்டிலேயே வளர்ந்து வரும் ஒரு மனிதனை அவ்வீட்டுத் தலைவன் கொல்ல சதி திட்டம் தீட்டுவதை கண்டறிந்த

மனைவியானவள் அவ்வுயிரைக் காப்பாற்றிய தன்மையினை “பீமணி இங்க வா என்றால் அமலி மானாப்பிள்ளை வீட்டை தவிர வேறு யார் பீமனி என்று கூப்பிட்டாலும் அவனுக்கு பிடிப்பதில்லை..” என்னக்கா .. அய்யா ராத்திரியோட ராத்திரியா யார்ட்டையுஞ் சொல்லாம இப்பயே வளவு வழியாக எங்கேயாவது ஓடிரு... எதுக்குக்கா?.... நாளைக்கு ஒன்னைய கொல்ல போறான்வ என்று கண்ணீரோடு சொன்னார் அமலி... எதுக்குக்கா என்று கண்ணீரோடு கேட்டான் பீமணி... அதெல்லாம் எனக்கு தெரியாது இந்தா... கையில 200 ரூபாய் இருக்கு இத எடுத்துக்கிட்டு நடந்தே தெசையவிளைக்கு போயி அங்கிருந்து ஏதாவது பஸ் புடிச்சு எங்கேயாவது போயிரு.... பீமணி எவ்வளவோ மறுத்தும் விடாப்பிடியாக அவனை வெளியே கதவடைத்தாள்.” (ஆ.சூ.உ.ப.208) என்று நாவலாசிரியர் மனிதாபிமானத்துடன் பெண் ஒரு உயிரை காப்பாற்றியதை எடுத்துக் கூறுகிறார்.

## உணவு முறை

மீனவர்களின் முக்கிய உணவா மீனாகும். குழந்தை பெற்ற பெண்களுக்கு மீன் உணவு கொடுக்கப்பட்டுள்ளது. :குழந்தை பெற்ற பெண்களுக்கு மாங்காய் சாளையை ஓமக்கறி வைத்து கொடுப்பார்கள். சுவையாக இருக்கும் பால் சுரப்பு அதிகமாகும் சூரை மீன்களின் தோல் வெள்ளி நிலத்தில் தகதகனாக மின்னும் சதைப்பகுதி ரத்த சிவப்பாக இருக்கும் இந்த மீன்களை பயன்படுத்தி தான் மாசி என்ற சுவையான உலர்மீன் தயாரிக்கப்படுகிறது.” (ஆ.சூ.உ.ப.26) என்பதிலிருந்தும் கடலில் செல்லும் போது உணவு இல்லாத வேலைகளில் மீன் தொழில் செய்யும் ஆடவர்கள் ஆமையின் ரத்தத்தையும் குடித்து வாழ்ந்துள்ளனர் என்பதை “சடார் என்று எழும்பிய அவர் பக்கத்தில் நீந்தி கொண்டிருந்த பஞ்சலாமைக் குட்டியை வளர்த்தி போட்டார். சூச ஆம இரத்தம் ரொம்ப நல்லது. சீக்கிரம் செமிக்காது. நல்ல வலுவு கூட எத்தனை நாளைக்கு இப்படிப்பட்டினியோ யார் கண்டா சீக்கிரம் குடிங்கல ஆமையின் வாயை சூசையார் பிடித்துக் கொள்ள சிலுவை ரத்தத்தை குடிக்க ஆரம்பித்தான். பிறகு சூசையர் குடித்தார் ((ஆ.சூ.உ.ப.189) என்பதிலிருந்து அவர்களது உணவு முறையை அறிய முடிகிறது.

## நம்பிக்கை

இன்று மக்களுடைய பேய் பிசாசு வீட்டிற்கு வரக்கூடாது பில்லி சூனியம் தனக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்று கருதி மந்திரவாதியிடம் சென்று தாயத்து திருநீறு குங்குமம் போன்ற பொருட்களை ஒரு துணியில் கட்டி விட்டு வாசலில் தொங்க விடுவார்கள். அதை போன்றதொரு நம்பிக்கை பரதவர்களிடம் காணப்பட்டது. “வீட்டு வாசலில் ஆமை ஈரலிலும் உருக்கி எடுத்த எண்ணெய்யை சிறிய பாத்திரத்தில் அல்லது பாட்டிலோ இன்னும் கட்டி வைத்திருப்பார்கள். பேய் பிசாசுகளுக்கு ஆமை எண்ணெயின் வாடை ஆகாது என்பது ஐதீகம்” (ஆ.சூ.உ.ப.182) என்று கூறுவதில் இருந்து அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை புலப்படுத்தப்படுகிறது. மதமாற்றம் மக்கள் தங்களுடைய வாழ்வு வளமாக அமைய வேண்டும் துன்பங்களிருந்து விடுபட வேண்டும் என்று கருதி தங்களுக்கு பிடித்த தெய்வத்தின் மீது மிகுந்த பற்றுடையவர்களாக காணப்படுவார்கள். சிலர் துன்பங்கள் வரும்போது உதவி செய்பவர்களின் சொற்படி கேட்டு நடப்பதுண்டு. அதை போன்று தான் பரதவ மக்கள்

கத்தோலிக்க சமயத்திற்கு மாறியதை இன்று வரை கடைபிடித்து வருவதை காண முடிகிறது திருச்செந்தூர் முருகன் கோவில் சாச்சமார்கிட்ட இருந்து காப்பாற்றுவதற்காக போர்ச்சுகீசிய வியாபாரி மார்ட்ட உதவி கேட்டுக்கான்வா ஆனா அதுக்கு நன்றியா மதம் மாறி இருக்கானுவ போர்ச்சுகீசியரின் நிபந்தனை வாக்குப்படி தூத்துக்குடியை தலைமையாகக் கொண்ட ராமேஸ்வரம் முதல் கன்னியாகுமரி வரையிலான பரதவர் துறைகள் அனைத்தும் தங்கள் சாதி தலைவரின் ஒப்புதலோடு கிறிஸ்தவ மதத்தை தழுவினார்கள். (ஆ.சூ.உ.ப.78) என்பதிலிருந்து அவர்கள் மதம் மாறிய தன்மையை அறிய முடிகிறது.

## தொழிலும் பொருளாதாரமும்

பரதவர்கள் மீன்பிடித்தல் முத்து குளித்தல் , உப்பு உற்பத்தி செய்தல் பெரிய கப்பல்களில் சரக்குகளை ஏற்றுதல் இறக்குதல் போன்ற தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். “அந்த காலத்தில் இருந்தே முத்துக் குளித்துறையிலிருந்து முழு உரிமை பரதவ மக்களின் சார்பாக அவர்களின் சாதி தலைவர்கள் பெற்றிருந்தார் கடலின் பெற்ற முத்துக்களில் ஒரு பகுதியை அந்தந்த காலங்களில் ஆட்சி பொருப்பிலிருந்த அரசர்களுக்கு தங்கள் சாதித்தலைவரும் மூலம் கொடுத்துவிட்டு மீதியை சந்தையில் விற்று பெரும்பொருள் திரட்டி வந்துள்ளனர். (ஆ.சூ.உ.ப.51) மீனவர்கள் கடலின் நீரின் போக்கு அலைகளில் போக்கு அசைவுகள் கடலில் வாழும் உயிரினங்கள் மீன் வகைகள் கடலில் உள்ள மலைகள் கடற்பாரைகள் நீர் சுழிவு போன்றவைகளையும் அறிந்து மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

## மாந்திரீகமும் வர்மக்கலையும்

மாந்திரீகம் என்பது இன்றும் மக்களிடையே தன்மை தீமை காரியங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனலாம் இருட்டியார்கள் மலையாளத்தில் மாந்திரீகம் படித்ததாகவும் ஏற்கனவே பரம்பரையாக அவர்களுடைய தாத்தா காலத்தில் இருந்து காப்பாற்றப்பட்டு சிலை ஒன்றை அவர் வைத்திருந்து பூஜை செய்ததாகவும் கதை கதையா பேசுவார்கள். மாந்திரீகத்தோடு நாட்டு அடிமுறைகளும் வரமும் தெரிந்து வைத்திருந்தார். கடலில் யாரூ காவது ஆலிமேல் அடிபட்டு மூச்சி இல்லாமல் கொண்டுவரப்பட்டால் ஒரே தட்டில் மூச்சு வர வைத்து விடுவார், வர்மத்தில் யாராவது அடிபட்டு வந்தாலும் அதற்குரிய வைத்தியம் பார்த்துவிடுவார் ஊரில் செய்வினை போன்ற விஷயங்கள் யார் வீட்டில் இருந்தாலும் அதை எடுப்பதற்கு இருட்டியார்கள் அழைக்கப்படுவார்” (ஆ.சூ.உ.ப.100) என்று கூறப்படுவதில் இருந்து மக்கள் மாந்திரீகங்களை நம்பி அதற்கு பயந்தும் வாழ்வை மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். இவை நன்மை தீமை இரண்டிற்கும் அதிக அளவு பயன்பட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது.

## குத்தகை முறைகள்

தேவாலயங்களின் நிர்வாக தேவைக்கு பயன்படுத்தும் பணத்தை திரட்டி கத்தோலிக்க திருச்சபை பின்பற்றிய வரிவிதிப்பே குத்தகைவே எனப்படுகிறது. கடல் துறைகளில் பிடிக்கப்படும் சுறா மீன்களின் தூவிகள் வெட்டப்பட்டு அவை கோவிலுக்கு சென்று கொடுக்கப்படும். மேலும் ஊர் தோப்பு, குத்தகை ஊர் எல்லையில் ஊருக்குள் வரும் சாமான்களை இறக்குவதற்கோ வண்டியில் இருந்து பிரிக்கும் கோயில் காசு போன்றவற்றை ஏலத்தில் விடப்பட்டு ஏலம் எடுத்தவர்கள் அதை தினசரி

பிரித்து ஊரில் கட்டிவிட வேண்டும். அதை பங்கு சாமியாரே ஆண்டு அனுபவித்து வருகிறார்" (ஆ.சூ.உ.ப.77) என்று கூறுவதில் இருந்து பரதவர்கள் அனைவரும் குத்தகை முறிக்கும் உட்பட்ட ஆக வேண்டும் என்ற நிலைமை இருந்துள்ளது.

## முடிவுரை

மீனவர்கள் வாழ்வானது இயற்கையுடனும், கடல்-காற்று அலைகள், புறாக்களுக்களுடனான போராட்டமின்றி, ஒவ்வொன்றிலும் பல்வேறு இனங்களை சந்தித்து வாழ்ந்துள்ளனர்.

அதிகம் படிப்பறிவில்லாத இந்த மக்கள் பயம் என்பதை இல்லாதவர்களாக வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்க்கையின் ஒவ்வொரு மணித்துளியும் போராட்டமாய் இருப்பதால் எதையும் ஒரு அசட்டுத்துணிச்சலோடு எதிர்கொள்ளும் மன தைரியம் உள்ளவர்களாக இருந்துள்ளனர்.

வாழ்வின் ஒவ்வொரு கூறுகளையும் தொழில் கலைகள் விருந்தோம்பல் மனிதாபிமான செயல்கள் போன்றவற்றை மேற்கண்டவாறு அறிய முடிகிறது.

முதன்மை நூல்
ஜோடிகுரூஸ்.ஆர்.என்.2004 ஆழி சூழ் உலகு : சென்னை தமிழினி பதிப்பகம் வெளியீடு

## துணைநூற் பட்டியல் (References)

1. பக்தவச்ல பாரதி, 2011 பண்பாட்டு மானிடவியல் புத்தாநத்தம் : அடையாளம் வெளியீடு
2. அனந்தபுரம் கிருட்டின மூர்த்தி – 2002 மீனவர் வாழ்வியல் சென்னை : திருக்குறள் பதிப்பகம் வெளியீடு
3. சிவசுப்பிரமனியஞ் ஆ.2011 : அடித்தள மக்கள் வரலாறு, சென்னை : பாவை பப்ளிக்கேசன்ஸ் வெளியீடு
4. ஜான் கென்னடி சே.ச. 2006 கடல்நிலம் மக்கள் , திண்டுக்கல் : வைகறை பதிப்பகம் வெளியீடு

© 2026 சந்திரா கோ, முனைவர்.ராமபாண்டி க, முனைவர்.மகேஸ்வரி மு. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..